www.Padasalai.Net www.TrbTnpsc.com

www.surabooks.com

11 ஆம் வகுப்பு

அரசுப் பொதுத்தேர்வு - மார்ச் - 2025

பதிவு எண்

PART - III

கணக்குப்பதிவியல் (விடைகளுடன்)

கால அளவு : 3.00 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள்: 90

அறிவுரைகள்: 1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2. **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

பகுதி - I

குறிப்பு : (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

(ii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். **[20 × 1 = 20]**

1. உரிமையாளரால் தொழிலுக்கு கொண்டு வரப்படும் தொகைக்கு வரவு செய்யப்படுவது :
(அ) முதல் கணக்கு (ஆ) ரொக்க கணக்கு
(இ) அனாமத்து கணக்கு (ஈ) எடுப்பு கணக்கு

2. இருப்பாய்வில் தோன்றும் சம்பளம் எங்கு காண்பிக்கப்படும்?
(அ) இருப்புநிலைக் குறிப்பின் பொறுப்புகள் பக்கம்
(ஆ) வியாபார கணக்கின் பற்று பக்கம்
(இ) இருப்புநிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கம்
(ஈ) இலாப நட்ட கணக்கின் பற்று பக்கம்

3. குறிமுறைகள் மற்றும் நிரல்கள் எழுதுபவர்கள் ______ என அழைக்கப்படுகின்றனர்.
(அ) அமைப்பு இயக்குபவர்கள்
(ஆ) அமைப்பு பகுப்பாய்வாளர்கள்
(இ) அமைப்பு நிரலாளர்கள்
(ஈ) அமைப்பு வடிவமைப்பாளர்கள்

4. பின்வரும் வாக்கியங்களில் எது உண்மையல்ல?
(அ) வியாபாரத் தள்ளுபடி கணக்கேடுகளில் பதிவு செய்யப்படுகிறது.
(ஆ) ரொக்கத் தள்ளுபடி கணக்கேடுகளில் பதிவு செய்யப்படுகிறது.
(இ) மாற்றுச்சீட்டின் செலுத்தற்குரிய நாளை கணக்கிடும் போது மூன்று நாட்கள் சலுகை நாட்களாகக் கூட்டப்படுகின்றன.
(ஈ) சொத்துகள் கடனுக்கு வாங்கியது உரிய குறிப்பேட்டில் பதிவு செய்யப்படுகிறது.

5. ஒரு வணிகத்தின் நிதி நிலையை அறிந்து கொள்ள அடிப்படையானது :
(அ) இருப்பு நிலைக் குறிப்பு (ஆ) குறிப்பேடு
(இ) பேரேடு (ஈ) இருப்பாய்வு

6. பின்வருவனவற்றில் எது சட்டமுறை ஆள்சார் கணக்கு?
(அ) வங்கி க/கு
(ஆ) கொடுபட வேண்டிய செலவுகள் க/கு
(இ) வினோத் க/கு
(ஈ) இவற்றுள் ஏதும் இல்லை

7. ரொக்க ஏட்டின் வங்கிப்பத்தியின் பற்று இருப்பு என்பது :
(அ) வங்கி அறிக்கையின்படி பற்றிருப்பு
(ஆ) ரொக்க ஏட்டின்படி மேல்வரைப்பற்று
(இ) வங்கி அறிக்கையின்படி வரவு இருப்பு
(ஈ) மேற்கூறிய ஏதுமில்லை

8. கொள்முதல் ஏட்டில் பதிவு செய்வது :
(அ) அனைத்து சரக்குகளின் கடன் கொள்முதல்
(ஆ) அனைத்து சரக்குகளின் கொள்முதல்
(இ) அனைத்து சொத்துகளின் கொள்முதல்
(ஈ) அனைத்து சொத்துகளின் கடன் கொள்முதல்

9. ஒரு நிறுவனத்தின் நிலம் மற்றும் கட்டடம் ₹ 40,000 பொறி இயந்திரம் ₹ 80,000 மற்றும் அதன் முதல் ₹ 1,00,000 எனில் அந்நிறுவனத்தின் வெளியாட்களுடனான பொறுப்புகள் :
(அ) ₹ 1,20,000 (b) ₹ 40,000
(இ) ₹ 20,000 (d) ₹ 80,000

10. ______ முறையில், பற்றுப் பக்கத்திலுள்ள பேரேட்டுக் கணக்குகளின் மொத்த தொகையும் மற்றும் வரவுப் பக்கத்திலுள்ள பேரேட்டுக் கணக்குகளின் மொத்த தொகையும் கணக்கிடப்பட்டு இருப்பாய்வில் பதியப்படுகின்றன.
(அ) இருப்பு முறை
(ஆ) மொத்தத் தொகை மற்றும் இருப்பு முறை
(இ) மொத்தத் தொகை முறை
(ஈ) மேற்குறிப்பிட்ட அனைத்தும்

11. கீழ்க்கண்ட பிழைகளில் எந்தப்பிழை அனாமத்து கணக்கைப் பயன்படுத்தி திருத்தம் செய்யப்படும்?
(அ) அகிலாவால் ₹ 900 மதிப்புள்ள சரக்கு திருப்பித் தரப்பட்டது. விற்பனைத் திருப்ப ஏட்டில் ₹ 90 என பதிவு செய்யப்பட்டது.
(ஆ) கொள்முதல் திருப்ப ஏட்டில் ₹ 1,000 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.
(இ) ரவிவர்மனுக்கு கடனுக்கு சரக்கு விற்றது விற்பனை ஏட்டில் பதிவு செய்யப்படாமல் உள்ளது.
(ஈ) நரேந்திரனால் சரக்கு திருப்பித் தரப்பட்டது, ஏடுகளில் பதிவு செய்யப்படாமல் உள்ளது.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com

12. கணக்கியல் சமன்பாடு குறிப்பது :
(அ) வியாபாரத்தின் முதல், பொறுப்புகளுக்கு சமமானது
(ஆ) வியாபாரத்தின் முதல், சொத்திற்கு சமமானது
(இ) வியாபாரத்தின் சொத்துகள், முதல் மற்றும் பொறுப்புகளுக்கு சமமானது
(ஈ) வியாபாரத்தின் பொறுப்புகள், சொத்திற்கு சமமானது

13. வணிகம் நீண்டகாலம் தொடர்ச்சியாக நடைபெறும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது :
(அ) கணக்கியல் கால அனுமானம்
(ஆ) வணிக தனித்தன்மை கருத்து
(இ) முன்னெச்சரிக்கை கொள்கை
(ஈ) நிறுவன தொடர்ச்சி கருத்து

14. பொருத்துக :

(1)	நேர்க்கோட்டு முறை	(i)	ஆண்டுத் தொகை அட்டவணை முறையை பயன்படுத்தி தேய்மானம் கணக்கிடப்படுகிறது.
(2)	குறைந்து செல் மதிப்பு முறை	(ii)	ஆண்டுத் தேய்மானமானது சொத்தின் ஆண்டு இறுதி மதிப்பினை அசசொத்தின் ஆண்டு தொடக்க மதிப்போடு ஒப்பிட்டு கணக்கிடப்படுகிறது.
(3)	ஆண்டுத் தொகை முறை	(iii)	அனைத்து ஆண்டுகளுக்கும் தேய்மானத் தொகை சமமாக ஒரே அளவாக இருக்கும்.
(4)	மறுமதிப்பீட்டு முறை	(iv)	ஒவ்வொரு ஆண்டும் தேய்மானத் தொகை குறைந்து கொண்டே செல்லும்.

(அ) (1)-(iv), (2)-(iii), (3)-(i), (4)-(ii)
(ஆ) (1)-(i), (2)-(ii), (3)-(iii), (4)-(iv)
(இ) (1)-(ii), (2)-(iii), (3)-(iv), (4)-(i)
(ஈ) (1)-(iii), (2)-(iv), (3)-(i), (4)-(ii)

15. கீழ்க்கண்ட கணக்குகளில் எந்தக் கணக்கின் இருப்பு இருப்பாய்வில் பற்றுப்பத்தியில் தோன்றும்?
(அ) எடுப்புகள் கணக்கு
(ஆ) பற்பல கடனீந்தோர் கணக்கு
(இ) முதல் கணக்கு
(ஈ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு

16. சரக்கு விற்பனைக்கான அடக்கம் ₹ 1,64,000 மற்றும் மொத்த இலாபம் ₹ 36,000 எனில் விற்பனையின் மொத்தம் _______.
(அ) ₹ 1,50,000 (ஆ) ₹ 2,00,000
(இ) ₹ 1,75,000 (ஈ) ₹ 1,28,000

17. புதிதாக நிறுவப்பட்ட இயந்திரத்தினைச் சோதனை ஓட்டம் மேற்கொள்வதற்குச் செய்த செலவு ₹20,000 :
(அ) முதலினச் செலவு
(ஆ) தொடக்கச் செலவு
(இ) நீள்பயன் வருவாயினச் செலவு
(ஈ) வருவாயினச் செலவு

18. சொத்தின் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புச் செலவுகள் காலப்போக்கில் அதிகரிக்கும் போது பின்வரும் தேய்மான முறைகளுள் எது சிறந்தது?
(அ) தேய்மான நிதி முறை
(ஆ) நேர்க்கோட்டு முறை
(இ) ஆண்டுத் தொகை முறை
(ஈ) குறைந்துசெல் இருப்பு முறை

19. முப்பத்தி ரொக்க ஏட்டில் முன்னிருந்து தூக்கி எழுதப்பட்ட வங்கி மேல்வரைப் பற்றின் இருப்பு தோன்றுவது :
(அ) வங்கிப்பத்தி பற்றுப்பக்கம்
(ஆ) ரொக்கப்பத்தி பற்றுப்பக்கம்
(இ) வங்கிப்பத்தி வரவுப்பக்கம்
(ஈ) ரொக்கப்பத்தி வரவுப்பக்கம்

20. வாரா ஐயக்கடன் ஒதுக்கு கணக்கு ஏற்கனவே இல்லையெனில் உருவாக்கப்பட்ட ஐயக்கடன் ஒதுக்கு :
(அ) வாராக்கடன் கணக்கில் வரவு வைக்க வேண்டும்
(ஆ) வாராக்கடன் கணக்கில் பற்று வைக்க வேண்டும்
(இ) இலாப நட்டக் கணக்கில் பற்று வைக்க வேண்டும்
(ஈ) பற்பல கடனாளிகள் கணக்கில் பற்று வைக்க வேண்டும்

பகுதி - II

குறிப்பு : எவையேனும் **ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும், வினா எண் **30-க்கு** கட்டாயமாக விடையளிக்கவும்.

[7 × 2 = 14]

21. கணக்கியல் செயல்பாட்டிலுள்ள படிநிலைகள் யாவை?

22. கடனீந்தோரான விஜிக்கு ₹96,000 கொடுத்து ₹1,00,000 -க்கான கணக்கு தீர்க்கப்பட்டது. மேற்கண்ட நடவடிக்கைக்கான குறிப்பேட்டு பதிவு தருக.

23. கீழ்கண்ட கணக்குகளின் இருப்புகள் இருப்பாய்வில் பற்றுப்பத்தியில் இடம் பெறுமா அல்லது வரவுப் பத்தியில் இடம்பெறுமா எனக் காட்டுக.
(i) வெளித்தூக்குக் கூலி
(ii) வட்டி பெற்றது
(iii) வாராக் கடன்
(iv) கொள்முதல் திருப்பம்

24. ராம்நாத் அவர்களின் ஏடுகளில் கீழ்காணும் இறுதி இருப்புகள் உள்ளன. அவைகளைக் கொண்டு 2022 ஜனவரி 1 இல் தொடங்கும் ஆண்டிற்கான தொடக்க இருப்பினை உரிய குறிப்பேட்டில் பதிவு செய்க.
ரொக்கம் ₹ 30,000, சரக்கிருப்பு ₹ 15,000
அறைகலன் ₹ 3,000, பற்பல கடனீந்தோர் ₹ 10,000

25. ஈடு செய் பிழைகள் என்றால் என்ன?

26. ஜாய் என்ற நிறுவனம் 1.4.2016 அன்று ₹75,000-க்கு இயந்திரம் ஒன்றை வாங்கியது 31.3.2018 அன்று ₹ 62,000-க்கு அவ்வியந்திரத்தை விற்பனை செய்தது. நிலைத்தவணை முறையில் தேய்மானம் ஆண்டுக்கு 10% நீக்கப்பட வேண்டும். ஆண்டுதோறும் கணக்குகள் மார்ச் 31-ல் முடிக்கப்படுகின்றன. விற்ற இயந்திரத்தின் மீதான இலாபம் அல்லது நட்டத்தை கணக்கிடுக.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com

27. பின்வரும் செலவுகளை முதலினம் மற்றும் வருவாயினச் செலவுகள் என வகைப்படுத்துக.

(i) புதிய இயந்திரம் வாங்கியதற்கான ஏற்றிச்செல் கட்டணம் மற்றும் நிறுவுகைச் செலவுகள் ₹ 1,000.

(ii) ஐந்து வருடங்களுக்கு வாடகைக்கு அமர்த்தப்பட்ட மோட்டார் வாகனம் மீதான வாடகை ஒவ்வொரு வருடமும் செலுத்தப்படுகிறது.

28. முன் கூட்டிச் செலுத்திய செலவு என்றால் என்ன?

29. கணக்குகள் குழுப்படுத்துதல் என்றால் என்ன?

30. 2022 ஜூன் 1 ஆம் நாள் சில்லறைக் காசாளரிடம் ₹ 2,000 கொடுக்கப்பட்டது. அவர் அந்த மாதம் செலவழித்த தொகை ₹ 1,880, 2022 ஜூன் 30 அன்று சில்லறைக் காசாளர் தலைமைக் காசாளரிடமிருந்து பெற்ற தொகை எவ்வளவு? மேலும் 2022 ஜூலை 1 அன்று தொடக்க ரொக்க இருப்பு எவ்வளவு?

பகுதி - III

குறிப்பு : எவையேனும் **ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **40 -க்கு** கட்டாயமாக விடையளிக்கவும்.

[7 × 3 = 21]

31. தீர்வுக் கருத்து பற்றி கருக்கமாக விவரிக்கவும்.

32. பின்வரும் வணிக நடவடிக்கைகளின் விளைவுகளை கணக்கியல் சமன்பாட்டில் காண்பிக்கவும்.

(i) அன்பு, ரொக்கம் ₹ 20,000, சரக்குகள் ₹ 12,000 மற்றும் இயந்திரம் ₹ 8,000 -த்துடன் தொழில் தொடங்கினார்.

(ii) ரமணியிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ₹ 7,000

(iii) கொடுபட வேண்டிய கூலி ₹ 400.

33. பின்வரும் விவரங்களிலிருந்து ஆனந்த் என்பவரின் கணக்கைத் தயாரிக்கவும்.

2017		₹
ஜூலை 1	ஆனந்த் கணக்கின் வரவு இருப்பு	4,000
15	ஆனந்துக்கு ரொக்கம் செலுத்தியது	2,000
18	ஆனந்திடமிருந்து கடனாக கொள்முதல் செய்தது	8,000
20	ஆனந்துக்கு ரொக்கம் செலுத்தியது	3,960
	அவர் அளித்த தள்ளுபடி	40
25	ஆனந்திடமிருந்து கடனுக்கு கொள்முதல் செய்தது	5,000

34. இருப்பாய்வு தயாரிக்கும் முறைகள் யாவை?

35. பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு 2022 ஏப்ரல் மாதத்திற்கான சந்தோஷ் ஆடையகத்தின் கொள்முதல் ஏடு தயாரிக்கவும்.

2022

ஏப்ரல் 1 பிரசாத்திடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது
ஒரு மீட்டர் ₹ 450 வீதம் 100 மீட்டர் சில்க் துணி
ஒரு மீட்டர் ₹ 180 வீதம் 75 மீட்டர் வெல்வெட் துணி

ஏப்ரல் 18 நாதன் நிறுவனம் நம்மிடமிருந்து கடனுக்கு வாங்கியது
ஒரு மீட்டர் ₹ 510 வீதம் 100 மீட்டர் சில்க் துணி

ஏப்ரல் 20 ஹரியிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது
கட்டு ஒன்று ₹ 730 வீதம் 50 கட்டுகள் காடாத் துணி
கட்டு ஒன்று ₹ 650 வீதம் 80 கட்டுகள் பருத்தி துணி

ஏப்ரல் 24 மோகனிடமிருந்து கடனுக்கு வாங்கியது
சட்டை துணிகள் மதிப்பு ₹ 7,000
சேலைகள் மதிப்பு ₹ 25,000

36. பின்வரும் விவரங்களிலிருந்து டிசம்பர் 31-2022-ம் நாளுக்குரிய வங்கி சரிகட்டும் பட்டியலை தயார் செய்து வங்கி அறிக்கையின்படியான இருப்பைக் கண்டறிக.

	விவரம்	₹
(i)	வங்கி அறிக்கையின்படி இருப்பு	6,000
(ii)	டிசம்பர் 28, 2022 அன்று வங்கியில் செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படவில்லை	2,000
(iii)	டிசம்பர் 20, 2022 அன்று விடுத்த காசோலை இன்னும் செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படவில்லை	3,000

37. இருப்பாய்வு தயாரிக்கப்பட்ட பின் கண்டறியப்பட்ட பின்வரும் பிழைகளைத் திருத்துவதற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

(அ) கொள்முதல் ஏட்டில் ₹ 10,000 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.

(ஆ) அறைகலன் பழுதுபார்ப்புச் செலவு ₹ 500 அறைகலன் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது.

(இ) அகிலனுக்கு கடனுக்கு ₹ 456-க்கு சரக்கு விற்றது அவர் கணக்கில் ₹ 654 என வரவு வைக்கப்பட்டுள்ளது.

38. கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு நேர்க்கோட்டு முறையில் தேய்மானம் நீக்கி இரண்டு ஆண்டுகளுக்கு இயந்திர கணக்கு தயாரிக்கவும்.

இயந்திரம் வாங்கிய நாள் 01.01.2022
இயந்திரத்தின் விலை ₹40,000
இயந்திரத்தின் வாழ்நாள் 5 ஆண்டுகள்

39. கீழ்காணும் விவரங்களிலிருந்து விற்பனைத் தொகையை கணக்கிடவும்.

தொடக்கச் சரக்கிருப்பு ₹ 30,000
இறுதிச் சரக்கிருப்பு ₹ 20,000
நிகர கொள்முதல் ₹ 2,00,000
விற்பனையில் மொத்த இலாப விகிதம் 30%

40. 2022 டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்பாய்வின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது.

பற்பல கடனாளிகள் ₹ 60,000, வாராக் கடன் ₹ 1,500

சரிக்கட்டுதல்கள் : கடனாளிகள் மீது 5% வாரா ஐயக் கடன் ஒதுக்கு உருவாக்கவும். இவ்விவரம் இறுதிச் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

பகுதி - IV

குறிப்பு : **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

[7 × 5 = 35]

41. (அ) கணக்கியலின் முக்கியத்துவத்தினை விரிவாக விளக்குக.

(அல்லது)

(ஆ) பின்வரும் நடவடிக்கைகளை சுமதி ஹோட்டலின் குறிப்பேடுகளில் பதிவு செய்க.

ஜனவரி		₹
1	ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது	3,00,000
2	ராஜிவிடமிருந்து கடன் கொள்முதல் செய்தது	1,00,000
3	வங்கியில் ரொக்கம் செலுத்தியது	2,00,000
20	வங்கியில் கடன் பெற்றது	1,00,000

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com

22	சொந்த உபயோகத்திற்காக வங்கியிலிருந்து பணம் எடுத்தது	800
23	ராஜிவிற்கு தேசிய மின்னணு பணப்பரிமாற்றம் மூலமாக ரொக்கம் செலுத்தி கணக்கு தீர்க்கப்பட்டது.	99,000
25	உரிமையாளரின் சங்க உறுப்பினர் சந்தா காசோலை மூலம் செலுத்தியது	200
26	உரிமையாளரின் வீட்டிற்கான மின் கட்டணம் எடுப்பு அட்டை மூலம் செலுத்தியது	2,000
31	அறக்கட்டளை அமைப்பிற்கு மதிய உணவு இலவசமாக வழங்கியது	1,000
31	வங்கி வசூலித்த பாதுகாப்பு பெட்டக வாடகை	1,000

42. **(அ)** பின்வரும் நடவடிக்கைகளை கலைச்செல்வி ஏடுகளில் நேரடியாகப் பேரேட்டில் எடுத்து எழுதவும்.

2022 அக்டோபர்		₹
1	தொழில் ரொக்கத்துடன் தொடங்கியது	25,000
5	வங்கியில் ரொக்கம் செலுத்தியது	12,500
10	அறைகலன் வாங்கி காசோலை கொடுத்தது	2,000
15	ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது	5,000
19	வாசு என்பவருக்கு கடனுக்கு சரக்கு விற்றது	4,000
22	சொந்தப் பயனுக்காக சரக்குகள் எடுத்துக் கொண்டது	500

(அல்லது)

(ஆ) கீழ்காணும் செலவினங்களையும் வரவினங்களையும் முதலினமா அல்லது வருவாயினமாக என வகைப்படுத்துக.

(i) நிலைச் சொத்து வாங்குவதற்காக இயக்குனரின் வெளிநாட்டுப் பயணத்திற்கு செலவழிக்கப்பட்ட தொகை ₹10,000

(ii) பெறுதற்குரிய கடனாளிகளிடமிருந்து அந்த வருடத்தில் பெற்ற தொகை.

(iii) பழைய கட்டடத்தை இடித்து அதே இடத்தில் புதிய கட்டடம் கட்டுவதற்காக மேற்கொண்ட செலவு.

(iv) தீயினால் இயந்திரத்தில் ஏற்பட்ட பாதிப்பிற்காக பெறப்பட்ட காப்பீட்டுரிமைத் தொகை.

(v) பழைய வாகனம் வாங்கி உடனடியாக பழுது பார்த்த செலவு ₹150.

43. **(அ)** பின்வரும் விபரங்களைக் கொண்டு இராபர்ட் அறைகலன் நிறுவனத்தின் 2017 ஜுன் மாதத்திற்கான கொள்முதல் ஏடு, கொள்முதல் திருப்ப ஏடு மற்றும் பேரேட்டுக் கணக்களை பதிவு செய்க.

2017

ஜுன் 1 பாலு நிறுவனத்திடம் ஒன்று ₹150 வீதம் 20 நாற்காலிகள் கடனுக்கு வாங்கியது.

ஜுன் 13 சுபாஷ் நிறுவனத்திடமிருந்து கடனுக்கு வாங்கியது
ஒன்று ₹3,100 வீதம் 2 அலமாரிகள்
ஒன்று ₹1,500 வீதம் 10 மேசைகள்
ஒன்று ₹200 வீதம் 15 நாற்காலிகள்
கழிக்க : 10% வியாபாரத் தள்ளுபடி
கூட்டுக : ₹220 சரக்கு தூக்குக்கூலி

ஜுன் 21 பழுதடைந்து இருந்ததால் பாலு நிறுவனத்திற்கு 2 நாற்காலிகள் திருப்பி அனுப்பப்பட்டன. ரொக்கம் பெறப்படவில்லை.

ஜுன் 24 சன்ரைஸ் நிறுவனத்திடம் கடனுக்கு வாங்கியது ஒன்று ₹1,300 வீதம் 25 அலமாரிகள்

ஜுன் 27 மௌலி நிறுவனத்திடம் கடனுக்கு வாங்கியது ஒன்று ₹3, 275 வீதம் 10 நிர்வாக மேசைகள்

ஜுன் 29 பழுதடைந்த மூன்று அலைமாரிகள் சன்ரைஸ் நிறுவனத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டன. ரொக்கம் பெறப்படவில்லை.

(அல்லது)

(ஆ) கீழ்க்காணும் தகவல்களிலிருந்து குமாரி அவர்களின் 2022 டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார மற்றும் இலாப நட்டகணக்கை தயாரிக்கவும்.

பற்று இருப்பு	₹	வரவு இருப்பு	₹
கொள்முதல்	14,500	விற்பனை	20,100
நிலக்கரி மற்றும் எரிபொருள்	600	செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு	400
உள்தூக்குக் கூலி	750	வாடகை பெற்றது	2,500
விளம்பரம்	500	கடனீந்தோர்	2,000
வெளித்தூக்கு கூலி	400	முதல்	5,000
வங்கி	1,200		
அறைகலன்	8,000		
கடனாளிகள்	2,250		
பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு	300		
சரக்கிருப்பு (1.1.2022)	1,500		
	30,000		30,000

சரிக்கட்டுதல்கள் :

(i) 31.12.2022 அன்று இறுதிச்சரக்கிருப்பு மதிப்பு ₹3,900

(ii) முன்கூட்டிச் செலுத்திய உள்தூக்கு கூலி ₹250

(iii) முன்வட்டிப் பெற்ற வாடகை ₹100

(iv) மேலாளருக்கான கழிவு, அவரது கழிவிற்குப் பின் உள்ள நிகர இலாபத்தில் 5% தரப்பட வேண்டும்.

44. **(அ)** ஆனந்த் என்பவரின் கீழ்கண்ட நடவடிக்கைகளை ரொக்கம் மற்றும் தள்ளுபடி பத்திகளுடைய ரொக்க ஏட்டில் பதிவு செய்யவும்.

2017 டிசம்பர்		₹
1	கைவச ரொக்கம்	19,500
4	ரொக்கத்திற்கு சரக்கு விற்றது	32,000
5	காந்தியிடம் கடனுக்கு கொள்முதல் செய்தது	20,000
9	கோபுவிடம் பெற்றது	11,800
	அவருக்கு அளித்த தள்ளுபடி	200
15	மின் கட்டணம் ரொக்கமாகச் செலுத்தியது	12,500
17	ரொக்கம் செலுத்தி கணிப்பொறி மற்றும் அதன் இதர பாகங்களை வாங்கியது	16,800
25	காந்திக்கு ₹19,700 செலுத்தி அவர் கணக்கு முழுவதையும் தீர்த்துக் கொண்டது	
28	திருவேங்கடத்திடம் ரொக்கம் பெற்றது	8,900
	அவருக்கு அளித்த தள்ளுபடி	100
30	வியாபார செலவுகளை ரொக்கமாக செலுத்தியது	3,500

(அல்லது)

(ஆ) கையால் எழுதும் கணக்கியல் முறைக்கும் கணினிமயக் கணக்கியல் முறைக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் ஏதேனும் 5 தருக.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com

45. **(அ)** சுதா, நிறுமம் ஏப்ரல் 1, 2020 அன்று ₹32,000 மதிப்புள்ள இயந்திரம் வாங்கியது. இயந்திரத்தை நிறுவுவதற்காக ₹14,000 செலவு செய்தது. ஆண்டுக்கு 10% தேய்மானம் நேர்க்கோட்டு முறையில் கணக்கிட வேண்டும். இயந்திரம் பயனற்றுப் போனதால் 30 ஜுன் 2022 அன்று ₹26,000-க்கு விற்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் கணக்குகள் டிசம்பர் 31-ல் முடிக்கப் பெறுகின்றன. இயந்திரக் கணக்கினைத் தயாரிக்கவும். **(அல்லது)**

(ஆ) செல்வி என்பவரின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் இருப்புகளிலிருந்து வியாபார இலாப நட்ட கணக்கினைத் தயாரிக்கவும்.

விவரம்	₹
சரக்கிருப்பு 01.01.2022	16,000
கொள்முதல்	44,000
விற்பனை	84,000
கொள்முதல் மீதான செலவுகள்	5,000
நிதிசார் செலவுகள் செலுத்தியது	7,000
விற்பனை மீதான செலவுகள்	2,000
வாராக்கடன்	2,400
வியாபாரச் செலவுகள்	2,400
அளித்த தள்ளுபடி	1,200
கழிவு கொடுத்தது	2,200
விற்பனைச் செலவுகள்	1,200
அலுவலக வாகனங்கள் மீதான பழுதுபார்ப்புச் செலவுகள்	1,200

2022 டிசம்பர் 31 அன்றைய இறுதிச் சரக்கிருப்பின் மதிப்பு ₹9,000

46. **(அ)** கீழ்க்காணும் பதிவுகளைத் திருத்தம் செய்யவும்.

	விவரம்	**பே. ப.எ**	**பற்று ₹**	**வரவு ₹**
(அ)	குமணன் க/கு ப		10,000	
	ரொக்கக் க/கு			10,000
	(குமணனுக்கு சம்பளம் செலுத்தியது)			
(ஆ)	செங்குட்டவன் க/கு ப		6,000	
	ரொக்கக் க/கு			6,000
	(செங்குட்டுவனுக்கு வாடகை செலுத்தியது)			
(இ)	ரொக்கக் க/கு ப		2,000	
	விற்பனைக் க/கு			2,000
	(ரொக்கத்திற்கு அறைகலன் விற்றது)			
(ஈ)	ரொக்கக் க/கு ப		10,000	
	குமாரராசா க/கு			10,000
	(குமாரராசாவுக்கு ரொக்கத்திற்கு சரக்கு விற்றது)			
(உ)	மணிமாறன் க/கு ப		1,000	
	கொள்முதல் க/கு			1,000
	(உரிமையாளர் மணிமாறனால் சொந்த உபயோகத்திற்காக சரக்கு எடுக்கப்பட்டது)			

(அல்லது)

(ஆ) பின்வரும் கணக்கியல் கோட்பாடுகளை விளக்குக.

(i) வணிகத் தனித்தன்மை கருத்து
(ii) அடக்கவிலை கருத்து
(iii) இரட்டைத் தன்மை கருத்து
(iv) பொருத்துகைக் கருத்து
(v) நிறுவனத் தொடர்ச்சி கருத்து

47. **(அ)** கீழ்கண்ட இருப்பாய்வில் சில பிழைகள் உள்ளன. அவற்றை சரிசெய்து மீண்டும் ஒரு இருப்பாய்வைத் தயாரிக்கவும்.

31.03.2017 ஆம் நாளைய இருப்பாய்வு

கணக்கின் பெயர்	**பற்று இருப்பு ₹**	**வரவு இருப்பு ₹**
கட்டடம்	60,000	
இயந்திரம்	17,000	
கொள்முதல் திருப்பம்	2,600	
வாராக்கடன்	2,000	
ரொக்கம்	400	
பெற்றத் தள்ளுபடி	3,000	
வங்கி மேல்வரைப்பற்று	10,000	
கடனீந்தோர்	50,000	
கொள்முதல்	1,00,000	
முதல்		72,800
பொருத்துகைகள்		5,600
விற்பனை		1,04,000
கடனாளிகள்		60,000
வட்டி பெற்றது		2,600
மொத்தம்	**2,45,000**	**2,45,000**

(அல்லது)

(ஆ) பின்வரும் விவரங்களிலிருந்து டிசம்பர் 31, 2022 - ம் நாளுக்குரிய ரொக்க ஏட்டின்படியான இருப்பைக் கண்டறிக.

	விவரம்	₹
1.	வங்கி அறிக்கையின்படி மேல்வரைப்பற்று	6,500
2.	வங்கியில் செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படவில்லை	10,500
3.	விடுத்த காசோலை இன்னும் செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தாதது	3,000
4.	வங்கியால் தவறுதலாக பற்று வைக்கப்பட்டது.	500
5.	வங்கியால் பற்று வைக்கப்பட்ட வங்கிக் கட்டணம் மற்றும் வட்டி	180
6.	சரக்குகள் மீதான காப்பீட்டு முனைமம் நிலை அறிவுறுத்தலின்படி வங்கியால் நேரடியாக செலுத்தப்பட்டது.	100

விடைகள்

பகுதி - I

1. (அ) முதல் கணக்கு
2. (ஈ) இலாப நட்ட கணக்கின் பற்று பக்கம்
3. (இ) அமைப்பு நிரலாளர்கள்
4. (அ) வியாபாரத் தள்ளுபடி கணக்கேடுகளில் பதிவு செய்யப்படுகிறது.
5. (அ) இருப்பு நிலைக் குறிப்பு **6.** (அ) வங்கி க/கு
7. (இ) வங்கி அறிக்கையின்படி வரவு இருப்பு
8. (அ) அனைத்து சரக்குகளின் கடன் கொள்முதல்
9. (இ) ₹ 20,000
10. (இ) மொத்தத் தொகை முறை
11. (ஆ) கொள்முதல் திருப்ப ஏட்டில் ₹ 1,000 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.
12. (இ) வியாபாரத்தின் சொத்துகள், முதல் மற்றும் பொறுப்புகளுக்கு சமமானது
13. (ஈ) நிறுவன தொடர்ச்சி கருத்து
14. (ஈ) (1)-(iii), (2)-(iv), (3)-(i), (4)-(ii)
15. (அ) எடுப்புகள் கணக்கு **16.** (ஆ) ₹ 2,00,000
17. (அ) முதலினச் செலவு
18. (ஈ) குறைந்துசெல் இருப்பு முறை
19. (இ) வங்கிப்பத்தி வரவுப்பக்கம்
20. (இ) இலாப நட்டக் கணக்கில் பற்று வைக்க வேண்டும்

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com

பகுதி - II

21. கணக்கியல் சுழலின் படிநிலைகள் பின்வருமாறு,
(i) நடவடிக்கைகளை இனம் கண்டு குறிப்பேட்டில் பதிவு செய்தல்.
(ii) எடுத்தெழுதுதல் மற்றும் இருப்புக்கட்டுதல். (iii) இருப்பாய்வு தயாரித்தல்.
(iv) வியாபாரக்கணக்கு தயாரித்தல். (v) இலாபநட்டக் கணக்கு தயாரித்தல்.
(vi) இருப்பு நிலைக்குறிப்பு தயாரித்தல்.

22. **குறிப்பேட்டுப் பதிவு**

நாள்	விவரங்கள்		பே.ப.எ	பற்று ₹	வரவு ₹
	விஜி க/கு	ப		1,00,000	
	ரொக்கக் க/கு				96,000
	பெற்ற தள்ளுபடி க/கு				4,000
	(விஜி கணக்கு தீர்க்கப்பட்டது)				

23.

(i)	வெளித்தூக்குக்கூலி	-	பற்று
(ii)	வட்டிப் பெற்றது	-	வரவு
(iii)	வாராக்கடன்	-	பற்று
(iv)	கொள்முதல் திருப்பம்	-	வரவு

24. **தொடக்கப் பதிவு**

நாள்	விவரம்		பே.ப.எ	பற்று ₹	வரவு ₹
2022	ரொக்கக் க/கு	ப		30,000	
ஜனவரி 1	சரக்கிருப்பு க/கு	ப		15,000	
	அறைகலன் க/கு	ப		3,000	
	பற்பல கடனீந்தோர் க/கு				10,000
	முதல் க/கு				38,000
	(சொத்துகள், மற்றும் பொறுப்புகள் கணக்கில் கொண்டு வரப்பட்டது)				

25. (i) வெவ்வேறு பிழைகள் ஒன்றுக்கொன்று ஈடு செய்பவையாக அமைந்தால், அவை ஈடு செய் பிழைகள் எனப்படும். இப்பிழைகள், தொடர்புடைய கணக்கிலோ அல்லது தொடர்பில்லாத கணக்கிலோ நிகழலாம்.
(ii) எனவே, ஒரு கணக்கின் கூடுதல் பற்று அல்லது வரவு மற்றொரு கணக்கின் கூடுதல் வரவு அல்லது பற்றின் மூலம் ஈடு செய்யப்படலாம். இப்பிழைகள், ஈடுகட்டும் பிழைகள் எனவும் அறியப்படுகின்றன.

26. **விற்ற இயந்திரத்தின் மீதான இலாபம் அல்லது நட்டத்தை கணக்கிடல்**

விவரங்கள்		₹
இயந்திரத்தின் அடக்கவிலை		75,000
கழிக்க : 2016-17க்கான தேய்மானம்	(75,000 × 10%)	7,500
		67,500
கழிக்க : 2017 - 18க்கான தேய்மானம்	(75,000 × 10%)	7,500
விற்ற நாளில் ஏட்டு மதிப்பு		60,000
கழிக்க : விற்ற விலை		62,000
விற்பனை மீதான இலாபம்		–2,000

விற்பனை நாளன்று, விற்பனை விலை, ஏட்டு மதிப்பினைக் காட்டிலும் அதிகம். எனவே வேறுபாட்டு தொகை ₹2,000 விற்ற இயந்திரத்தின் மீதான இலாபம் ஆகும்.

27. (i) முதலினச் செலவு (ii) வருவாயினச் செலவு

28. நடப்பு ஆண்டில் செலுத்தப்பட்ட ஏதேனும் ஒரு செலவு அல்லது அதில் ஒரு பகுதி அடுத்த கணக்காண்டிற்கும் அதன் பலன் அல்லது சேவையைத் தருமானால், அதனை முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் என்கிறோம். அவற்றைப் பயன்தீராச் செலவுகள் என்றும் அழைக்கலாம்.

29. (i) எந்த ஒரு நிறுவனத்திலும், முதன்மை அலகு பல முக்கியத் தலைப்புகளாக வகைப்படுத்தப்பட்டு அவை மேலும் பல துணைத் தலைப்புகளாக பிரிக்கப்படுகின்றன.
(ii) கணக்குகளை முதன்மை மற்றும் துணை தலைப்பென்று பல்வேறு குழுக்களாக வகைபடுத்துதல் மற்றும் ஒவ்வொரு கணக்கிற்கும் குறிமுறை ஒதுக்கியபின், இவைகள் கணினி அமைப்பில் நிரலாக்கம் செய்யப்படுகின்றன.

30. 2022 ஜுலை 1 அன்று தொடக்க இருப்பு ₹2,000.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com

பகுதி - III

31. (i) தீர்வு கருத்தின்படி, ஒரு சொத்தின் மதிப்பில் ஏற்படும் மாற்றம் அச்சொத்துக்கள் வணிகத்தால் தீர்வு செய்யப்படும் போது மட்டுமே பதிவு செய்யப்படும்.

(ii) புராதன அடக்க விலையில் சொத்துக்கள் பதிவு செய்தால், சொத்தின் மதிப்பில் ஏற்படும் மாற்றம் அச்சொத்து தீர்வு செய்யும் போது மட்டுமே கணக்கில் கொண்டு வரப்பட வேண்டும்.

32. **கணக்கியல் சமன்பாடு**

நடவடிக்கைகள்	சொத்துகள்				முதல் ₹	பொறுப்புகள்	
	ரொக்கம் ₹	சரக்கிருப்பு ₹	இயந்திரம் ₹	கடனாளிகள் ₹		கடனீந்தோர்	கொடுபட வேண்டிய கூலி ₹
(i) ரொக்கம், சரக்கிருப்பு மற்றும் இயந்திரத்துடன் தொழில் தொடங்கியது	+20,000	+12,000	+8,000		+40,000		
சமன்பாடு	**+20,000**	**+12,000**	**+8,000**		**+40,000**		
(ii) கடன் கொள்முதல்		+7,000				+7,000	
சமன்பாடு	**+20,000**	**+19,000**	**+8,000**		**+40,000**	**+7,000**	
(iii) கொடுபட வேண்டிய கூலி					– 400		+ 400
சமன்பாடு	**+20,000**	**+19,000**	**+8,000**		**+39,600**	**+7,000**	**+ 400**

33. ப **ஆனந்த் க/கு** வ

நாள்	விவரம்	கு. ப. எண்	₹	நாள்	விவரம்	கு. ப. எண்	₹
2017 ஜூலை 15	ரொக்கக் க/கு		2,000	2017 ஜூலை 1	ரொக்கக் க/கு		4,000
20	ரொக்கக் க/கு		4,000	18	கொள்முதல் க/கு		8,000
31	இருப்பு கீ/இ		11,000	25	கொள்முதல் க/கு		5,000
			17,000				17,000
				ஆகஸ்ட் 1	இருப்பு கீ/கொ		11,000

34. இருப்பாய்வு கீழ்க்கண்ட முறைகளில் தயாரிக்கப்படுகிறது.

(i) இருப்புமுறை (ii) மொத்தத் தொகை முறை (iii) மொத்தத் தொகை மற்றும் இருப்பு முறை

35. **சந்தோஷ் ஆடையகத்தின் கொள்முதல் ஏடு**

நாள்	விவரங்கள்	உள்வரு இடாப்பு எண்	பே.ப எண்	தொகை (₹)	
				விளக்கம்	மொத்தம்
2022 ஏப்ரல் 1	பிரசாத் 100 மீட்டர் சில்க் துணி ₹ 450 வீதம் 75 மீட்டர் வெல்வெட் துணி ₹ 180 வீதம்			45,000 13,500	58,500
ஏப் 20	ஹரிராம் 50 கட்டுகள் காடாத் துணி ₹ 730 வீதம் 80 கட்டுகள் காலிக்கோ துணி ₹ 650 வீதம்			36,500 52,000	88,500
ஏப் 24	மோகன் சட்டைத் துணியின் மதிப்பு புடவைகள்			7,000 25,000	32,000
	கொள்முதல் க/கு ப				**1,79,000**

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

www.surabooks.com

36.

விவரம்	தொகை ₹	தொகை ₹
வங்கி அறிக்கையின் படி இருப்பு		6,000
கூட்டுக :		
செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படவில்லை		2,000
கழிக்க :		8,000
விடுத்த காசோலை இன்னும் முன்னிலைப்படுத்தபடவில்லை		3,000
ரொக்க ஏட்டின் படி இருப்பு		**5,000**

37. **குறிப்பேட்டுப் பதிவுகள்**

வ.எண்	விவரம்	பே.ப.எ.	பற்று ₹	வரவு ₹
(அ)	அனாமத்துக் க/கு ப		10,000	
	கொள்முதல் க/கு			10,000
	(கொள்முதல் ஏட்டில் ₹10,000 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது திருத்தியது)			
(ஆ)	பழுதுபார்ப்புச் செலவு க/கு ப		500	
	அறைகலன் க/கு			500
	(அறைகலன் பழுதுபார்ப்புச் செலவு ₹500 அறைகலன் கணக்கில் பற்று வைக்கப்பட்டது திருத்தியது)			
(இ)	அகிலன் க/கு ப		1,110	
	அனாமத்துக் க/கு			1,110
	(அகிலன் கணக்கில் கூடுதலாகப் பற்று வைக்கப்பட்டது திருத்தம் செய்யப்பட்டது)			

38. ஆண்டுத் தேய்மானத் தொகை $= \dfrac{\text{சொத்தின் ஆரம்ப அடக்கவிலை}}{\text{சொத்தின் எதிர்நோக்கும் பயனளிப்புக்காலம்}} = \dfrac{40,000}{5} =$ ₹ **8,000**

இயந்திரக் கணக்கு

நாள்	விவரம்	தொகை ₹	நாள்	விவரம்	தொகை ₹
2022 ஜன 1	வங்கி க/கு	40,000	2022 ஜன 31	தேய்மானம் க/கு	8,000
				இருப்பு கீ/இ	32,000
		40,000			40,000
பிப் 1	இருப்பு கீ/கொ	32,000	பிப் 28	தேய்மானம் க/கு	8,000
				இருப்பு கீ/இ	24,000
		32,000			32,000
2022 மார் 1	இருப்பு கீ/கொ	24,000			

39. விற்ற சரக்கின் அடக்கவிலை = தொடக்க சரக்கிருப்பு + நிகர கொள்முதல் + நேரடிச் செலவுகள் – இறுதிச்சரக்கிருப்பு

= 30,000 + 2,00,000 – 20,000 = ₹2,10,000

விற்பனையை 100 என்று எடுத்துக்கொள்ளவும். 100

கழி : மொத்த லாபம் விற்பனையில் 30%

விற்ற சரக்கின் அடக்கவிலை 70

மொத்த லாப விகிதம் $= \dfrac{30}{70} \times 2,10,000 =$ ₹ 90,000

விற்பனை = விற்ற சரக்கின் அடக்கவிலை + மொத்த லாபம்

= 2,10,000 + 90,000 = 3,00,000

40. வாரா ஐயக்கடன் ஒதுக்கு = ₹60,000 × $\dfrac{5}{100}$ = ₹3,000

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com

ப 2022 டிசம்பர் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய இலாப நட்டக் கணக்கு வ

விவரம்	₹	₹	விவரம்	₹	₹
வாராக்கடன்	1,500				
கூட்டுக : வாரா ஐயக்கடன்	3,000				
		4,500			

ப 2002 டிசம்பர் 31ஆம் நாளன்றைய இருப்புநிலைக் குறிப்பு வ

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹	₹
			பற்பல கடனாளிகள்	60,000	
			கழிக்க : வாரா ஐயக்கடன் ஒதுக்கு	3,000	
					57,000

பகுதி - IV

41. **(அ)** கணக்கியலின் முக்கியத்துவம் கீழ்க்கண்டவாறு விளக்கப்படுகின்றன :

(i) **முறையான பதிவேடுகள் :** ஒரு நிறுவனத்தின் அனைத்து நிதிசார்ந்த நடவடிக்கைகளும் கணக்கேடுகளில் முறையாகப் பதியப்படுகின்றன.

(ii) **நிதிநிலை அறிக்கைகள் தயாரித்தல் :**வருமான அறிக்கை அல்லது வியாபாரம் மற்றும் இலாப நட்டக் கணக்கு மற்றும் இருப்பு நிலைக்குறிப்பு போன்ற நிதிநிலை அறிக்கைகளை காலமுறை தோறும் தயாரிப்பதன் மூலம் வணிகத்தின் இயக்க முடிவுகளையும், நிதிநிலையையும் அறிய முடியும்.

(iii) **வளர்ச்சியை மதிப்பிடல் :** வணிகத்தின் நீர்மைத்தன்மை, இலாபத்தன்மை மற்றும் கடன் தீர்க்கும் திறன் ஆகியவற்றின் முழுமையான நிலையினை நிர்வாகத்திற்கு கணக்கியல் அளிக்கிறது.

(iv) **சட்டச் சான்றாக இருத்தல் :** பொதுவாக நீதிமன்ற வழக்குகளிலும், இதர ஆணையங்களிலும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண, கணக்கேட்டுப் பதிவுகள் சான்றாக ஏற்கப்படுகின்றன.

(அல்லது)

(ஆ) **சுமதி ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்**

நாள்	விவரம்		கு. ப. எண்	பற்று ₹	வரவு ₹
ஜனவரி 1	ரொக்கக் க/கு சுமதி முதல் க/கு (ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது)	ப		3,00,000	3,00,000
2	கொள்முதல் க/கு ராஜீவ் க/கு (கடனுக்கு கொள்முதல் செய்தது)	ப		1,00,000	1,00,000
3	வங்கி க/கு ரொக்கக் க/கு (வங்கியில் ரொக்கம் செலுத்தியது)	ப		2,00,000	2,00,000
20	ரொக்கக் க/கு வங்கிக் கடன் க/கு (வங்கியில் கடன் பெற்றது)	ப		1,00,000	1,00,000
22	எடுப்புகள் க/கு வங்கி க/கு (சொந்த உபயோகத்திற்காக வங்கியிலிருந்து பணம் எடுத்தது)	ப		800	800
23	ராஜீவ் க/கு வங்கி க/கு பெற்ற தள்ளுபடி க/கு (ராஜீவ் கணக்கு தீர்க்கப்பட்டது)	ப		1,00,000	99,000 1,000
25	எடுப்புகள் க/கு வங்கி க/கு (உரிமையாளரின் சந்தா காசோலை மூலம் செலுத்தியது)	ப		200	200
26	எடுப்புகள் க/கு வங்கி க/கு (மின் கட்டணம் எடுப்பு அட்டை மூலம் செலுத்தியது)	ப		2,000	2,000
31	அறக்கட்டளை க/கு கொள்முதல் க/கு (உணவு இலவசமாக அறக்கட்டளை அமைப்பிற்கு வழங்கியது)	ப		1,000	1,000
31	பெட்டக வாடகை க/கு வங்கி க/கு (பெட்டக வாடகை செலுத்தியது)	ப		1,000	1,000

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

www.surabooks.com

42. (அ)

பேரேட்டுக் கணக்குகள்

ரொக்கக் க/கு

ப வ

நாள்	விவரம்	கு. ப. எண்	₹	நாள்	விவரம்	கு. ப. எண்	₹
2022 அக். 1	கலைச்செல்வி முதல் க/கு		25,000	2022 அக். 15	வங்கி க/கு		12,500
				15	கொள் முதல் க/கு		5,000
				31	இருப்பு கீ/இ		7,500
			25,000				25,000
2022 நவ. 1	இருப்பு கீ/கொ		7,500				

கலைச்செல்வி முதல் க/கு

ப வ

நாள்	விவரம்	கு. ப. எண்	₹	நாள்	விவரம்	கு. ப. எண்	₹
2022 அக். 31	இருப்பு கீ/இ		25,000	2022 அக். 1	ரொக்கக் க/கு		25,000
			25,000				25,000
				2022 நவ. 1	இருப்பு கீ/கொ		25,000

வங்கி க/கு

ப வ

நாள்	விவரம்	கு. ப. எண்	₹	நாள்	விவரம்	கு. ப. எண்	₹
2022 அக். 5	ரொக்கக் க/கு		12,500	2022 அக். 10	அறைகலன் க/கு		2,000
				31	இருப்பு கீ/இ		10,500
			12,500				12,500
நவ. 1	இருப்பு கீ/கொ		10,500				

அறைகலன் க/கு

ப வ

நாள்	விவரம்	கு. ப. எண்	₹	நாள்	விவரம்	கு. ப. எண்	₹
2022 அக். 10	வங்கி க/கு		2,000	2022 அக். 31	இருப்பு கீ/இ		2,000
			2,000				2,000
நவ. 1	இருப்பு கீ/கொ		2,000				

கொள்முதல் க/கு

ப வ

நாள்	விவரம்	கு. ப. எண்	₹	நாள்	விவரம்	கு. ப. எண்	₹
2022 அக். 15	ரொக்கக் க/கு		5,000	2022 அக். 22	எடுப்புகள் க/கு		500
				31	இருப்பு கீ/இ		4,500
			5,000				5,000
நவ. 1	இருப்பு கீ/கொ		4,500				

வாசு க/கு

ப வ

நாள்	விவரம்	கு. ப. எண்	₹	நாள்	விவரம்	கு. ப. எண்	₹
2022 அக். 19	விற்பனை க/கு		4,000	2022 அக். 31	இருப்பு கீ/இ		4,000
			4,000				4,000
2022 நவ. 1	இருப்பு கீ/கொ		4,000				

விற்பனை க/கு

ப வ

நாள்	விவரம்	கு. ப. எண்	₹	நாள்	விவரம்	கு. ப. எண்	₹
2022 அக். 31	இருப்பு கீ/இ		4,000	2022 அக். 19	வாசு க/கு		4,000
			4,000				4,000
				2022 நவ. 1	இருப்பு கீ/கொ		4,000

எடுப்புகள் க/கு

ப வ

நாள்	விவரம்	கு. ப. எண்	₹	நாள்	விவரம்	கு. ப. எண்	₹
2022 அக். 22	கொள் முதல் க/கு		500	2022 அக். 31	இருப்பு கீ/இ		500
			500				500
நவ. 1	இருப்பு கீ/கொ		500				

(அல்லது)

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.padasalai.net

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com

(ஆ) (i) முதலினச் செலவு (ii) வருவாயின வரவு (iii) முதலினச் செலவு

(iv) முதலின வருவாய் (v) முதலினச் செலவு

43. (அ) **இராபர்ட் அறைகலன் நிறுவனத்தின் ஏடுகளில் கொள்முதல் ஏடு**

நாள்	விவரம்	உள் இடாப்பு எண்	பே.ப எண்	தொகை (₹)	
				விளக்கம்	மொத்தம்
2017 ஜூன் 1	பாலு நிறுவனம்				
	20 நாற்காலிகள் ₹ 150 வீதம்				3,000
ஜூன் 13	சுபாஷ்				
	2 அலமாரிகள் ₹ 3100 வீதம்			6,200	
	10 மேசைகள் ₹ 1,500 வீதம்			15,000	
	15 நாற்காலிகள் ₹ 200 வீதம்			3,000	
				24,200	
ஏப் 20	**கழிக்க :**				
	வியாபாரத்தள்ளுபடி 10%			2,420	
				21,780	
	கூட்டுக :				
	சரக்கு தூக்குக்கூலி			220	22,000
ஜூன் 24	சன்ரைஸ் நிறுவனம்				
	25 அலமாரிகள் ₹ 1300 வீதம்				32,500
ஜூன் 27	மௌலி				
	10 நிர்வாக மேசைகள் ₹ 3,275 வீதம்				32,750
	கொள்முதல் க/கு ப				**90,250**

கொள்முதல் திருப்ப ஏடு

நாள்	விவரம்	பே.ப எண்	ப. கு எண்	தொகை (₹)		குறிப்பு
				விளக்கம்	மொத்தம்	
2017	பாலு நிறுவனம்					
ஜூன் 21	2 நாற்காலிகள் ₹ 150 வீதம்				300	பழுதடைவு
ஜூன் 29	சன்ரைஸ் நிறுவனம்					
	3 அலமாரிகள் ₹ 1,300 வீதம்				3,900	தரம் குறைவு
	கொள்முதல் திருப்ப க/கு வ				**4,200**	

பேரேட்டுக் கணக்குகள்

ப **கொள்முதல் கணக்கு** வ

நாள்	விவரம்	கு. ப எண்	தொகை (₹)	நாள்	விவரம்	கு. ப. எண்	தொகை (₹)
2017 ஜூன் 30	பற்பல கடனிந்தோர் க/கு		90,250				

ப **கொள்முதல் திருப்பக் க/கு** வ

நாள்	விவரம்	கு.ப எண்	தொகை (₹)	நாள்	விவரம்	கு. ப. எண்	தொகை (₹)
				2017 ஜூன் 30	பற்பல கடனிந்தோர் க/கு		4,200

ப **பாலு நிறுவனக் கணக்கு** வ

நாள்	விவரம்	கு.ப எண்	தொகை (₹)	நாள்	விவரம்	கு. ப. எண்	தொகை (₹)
2017 ஜூன் 21	கொள்முதல் திருப்பக் க/கு		3,900	2017 ஜூன் 1	கொள்முதல் க/கு		3,000

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

www.surabooks.com

ப **சன்ரைஸ் நிறுவனக் கணக்கு** வ

நாள்	விவரம்	கு.ப எண்	தொகை (₹)	நாள்	விவரம்	கு. ப. எண்	தொகை (₹)
2017 ஜூன் 29	கொள்முதல் திருப்பக் க/கு		3,900	2017 ஜூன் 24	கொள்முதல் க/கு		32,500

ப **மௌலி நிறுவனக் கணக்கு** வ

நாள்	விவரம்	கு. ப எண்	தொகை (₹)	நாள்	விவரம்	கு. ப. எண்	தொகை (₹)
				2017 ஜூன் 27	கொள்முதல் க/கு		32,750

ப **சுபாஷ் நிறுவனக்கணக்கு** வ

நாள்	விவரம்	கு.ப எண்	தொகை (₹)	நாள்	விவரம்	கு. ப. எண்	தொகை (₹)
				2017 ஜூன் 13	கொள்முதல் க/கு		22,000

(அல்லது)

(ஆ) **குமாரி என்பவரது ஏடுகளில் 2022, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார இலாப நட்டக் கணக்கு**

ப வ

விவரம்	தொகை₹	தொகை₹	விவரம்	தொகை₹	தொகை₹
தொடக்கச் சரக்கிருப்பு		1,500	விற்பனை		20,100
கொள்முதல்		14,500	இறுதிச் சரக்கிருப்பு		3,900
நிலக்கரி மற்றும் எரிபொருள்		600			
உள்தூக்குக் கூலி	750				
கழிக்க : முன் கூட்டிச் செலுத்தியது	250	500			
மொத்த இலாபம் கீ/இ		**6,900**			
		24,000			24,000
விளம்பரம்		500	மொத்த இலாபம் கீ/கொ		6,900
வெளித்தூக்குக் கூலி		400	வாடகைப் பெற்றது	2,500	
மேலாளருக்கான கழிவு		400	**கழிக்க :** முன் கூட்டிப் பெற்றது	100	2,400
நிகர இலாபம் (முதல் கணக்கிற்கு மாற்றுவது)		**8,000**			
		9,300			9,300

44. **(அ)** **ஆனந்த் என்பவரது ஏடுகளில் இருபத்தி ரொக்க ஏடு (ரொக்கம் மற்றும் தள்ளுபடி பத்திகளுடையது)**

ப வ

நாள்	பெறுதல்கள்	இ. எண்	பே.ப. எண்	தொகை ₹ தள்ளுபடி	தொகை ₹ ரொக்கம்	நாள்	செலுத்தல்கள்	சா.சீ. எண்	பே.ப. எண்	தொகை ₹ தள்ளுபடி	தொகை ₹ ரொக்கம்
2017 டிச 1	இருப்பு கீ/கொ				19,500	2017 டிச 15	மின்கட்டணம் க/கு				12,500
4	விற்பனை க/கு				32,000	17	கணிப்பொறி க/கு				16,800
9	கோபு க/கு			200	11,800	25	காந்தி க/கு			300	19,700
28	திருவேங்கடம் க/கு			100	8,900	30	வியாபார செலவுகள் க/கு				3,500
						31	இருப்பு கீ/இ				**19,700**
				300	72,200					300	72,200
2018 ஜன 1	இருப்பு கீ/கொ				19,700						

(அல்லது)

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

www.surabooks.com

(ஆ) கையால் எழுதும் கணக்கியல் முறைக்கும் கணினிமயக் கணக்கியல் முறைக்கும் இடையேயான வேறுபாடுகள் :

	அடிப்படை	கையால் எழுதும் கணக்கியல் முறை	கணினிமயக் கணக்கியல் முறை
i)	நடவடிக்கைகளைப் பதிவு செய்தல்	நடவடிக்கைகள் கையால் எழுதுவதன் மூலம் பதிவு செய்யப்படுகின்றது.	நடவடிக்கைகள் கணினியைப் பயன்படுத்தி பதிவு செய்யப்படுகின்றது.
ii)	தேக்ககம்	நடவடிக்கைகள் ஏட்டுத்தொகுதிகளில் திரட்டி வைக்கப்படுகின்றது.	நடவடிக்கைகள் நன்கு வடிவமைக்கப்பட்ட தரவுத்தளங்களில் திரட்டி வைக்கப்படுகின்றது.
iii)	பேரேட்டுக் கணக்குகள், இருப்பாய்வு மற்றும் நிதிநிலை அறிக்கைகள் தயார் செய்தல்	பேரேட்டுக் கணக்குகள் இருப்பாய்வு மற்றும் நிதிநிலை அறிக்கைகள் கையால் எழுதும் முறையில் தயாரிக்கப்படுகின்றது.	குறிப்பேட்டில் பதிவு செய்யப்பட்டுவிட்டால் அல்லது துணை ஏடுகளில் பதியப்பட்டுவிட்டால், தரவு தன்னிச்சையாகவே செயல்முறைக்குள்ளாக்கப்பட்டு பேரேட்டு கணக்குகள் இருப்பாய்வு மற்றும் இருப்பு நிலைக்குறிப்பும் தன்னிச்சையாகவே தயாரிக்கப்பட்டுவிடும்
iv)	அறிக்கைகள் தயார் செய்தல்	நிதிநிலை அறிக்கைகளை பகுப்பாய்வு செய்வது மற்றும் அறிக்கைகள் தயார் செய்வதெல்லாம் கையால் எழுதி முடிக்கப்படும்.	விகிதபகுப்பாய்வு, ரொக்க ஓட்ட அறிக்கை தயார் செய்தல் போன்ற நிதிநிலை அறிக்கைகளை பகுப்பாய்வு செய்தல், தன்னிச்சையாகவே நடைபெறும்.
v)	எடுத்துக்கொள்ளும் நேரம்	குறிப்பேட்டுப் பதிவுகள் முதல், அறிக்கைகள் உருவாக்குவது வரை அனைத்தும் கையால் எழுதும் முறையில் நடைபெறுவதால், இது ஏராளமான நேரத்தை எடுத்துக்கொள்கிறது.	இது ஏராளமான நேரத்தை சேமிக்கிறது. குறிப்பேட்டுப் பதிவுகளில் அல்லது துணை ஏடுகளில் தரவுகளை பதிவதற்கு மட்டுமே நேரம் எடுத்துக் கொள்ளப்படுகிறது. தரவுகளை பதிந்துவிட்டால், பேரேடு, இருப்பாய்வு, நிதிநிலை அறிக்கைகள் தயார் செய்து அல்லது அறிக்கைகளை உருவாக்குதெல்லாம் ஒரு சில வினாடிகளில் முடிந்துவிடும்.

45. (a) **விற்ற இயந்திரம் மீதான இலாபம் அல்லது நட்டம் கணக்கிடுதல்**

விவரம்	தொகை ₹
இயந்திரத்தின் அடக்கவிலை	32,000
கூட்டுக : நிறுவுதல் செலவுகள்	14,000
	46,000
கழிக்க : முதலாமாண்டு தேய்மானம் $46,000 \times \frac{10}{100} \times \frac{9}{12}$	3,450
	42,550
கழிக்க : இரண்டாமாண்டு தேய்மானம் $\left(46,000 \times \frac{10}{100}\right)$	4,600
	37,950
கழிக்க : மூன்றாமாண்டு தேய்மானம் $\left(46,000 \times \frac{10}{100} \times \frac{6}{12}\right)$	2,300
ஏட்டு மதிப்பு	35,650
விற்றவிலை	26,000
விற்ற இயந்திரத்தின் மீதான நட்டம்	9,650

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

www.surabooks.com

சுதா நிறும ஏடுகளில்

ப **இயந்திரக் கணக்கு** வ

நாள்	விவரம்	தொகை ₹	நாள்	விவரம்	தொகை ₹
2020 ஏப்ரல் 1	வங்கி க / கு	32,000	2020 டிசம். 31	தேய்மானம் க / கு	3,450
"	வங்கி க / கு	14,000	டிசம். 31	இருப்பு கீ / இ	42,550
		46,000			46,000
2021 ஜனவரி 1	இருப்பு கீ / கொ	42,550	2021 டிசம். 31	தேய்மானம் க / கு	4,600
			டிசம். 31	இருப்பு கீ / இ	37,950
		42,550			42,550
2022 ஜனவரி 1	இருப்பு கீ / கொ	37,950	2022 ஜுன் 30	தேய்மானம் க / கு	2,300
			ஜுன் 30	வங்கி க / கு	26,000
			ஜுன் 30	இலாப நட்டக் கணக்கு	9,650
		37,950			37,950

(அல்லது)

(ஆ) **செல்வி என்பவரது ஏடுகளில்**

ப **2022 டிசம்பர் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார, இலாபநட்டக் கணக்கு** வ

விவரம்	தொகை ₹	விவரம்	தொகை ₹
தொடக்கச் சரக்கிருப்பு	16,000	விற்பனை	84,000
கொள்முதல்	44,000	இறுதிச் சரக்கிருப்பு	9,000
கொள்முதல் மீதான செலவுகள்	5,000		
மொத்த இலாபம் கீ / இ	**28,000**		
(இலாபநட்டக் கணக்கிற்கு மாற்றுவது)	93,000		93,000
நிதிசார் செலவுகள்	7,000	மொத்த இலாபம் கீ / கொ	
விற்பனை மீதான செலவுகள்	2,000	(வியாபாரக் கணக்கிலிருநது மாற்றியது)	28,000
வாராக்கடன்	2,400		
வியாபாரச் செலவுகள்	2,400		
அளித்த தள்ளுபடி	1,200		
கழிவு கொடுத்தது	2,200		
விற்பனைச் செலவுகள்	1,200		
பழுது பார்ப்புச் செலவுகள்	1,200		
நிகர இலாபம்	**8,400**		
(முதல்வ கணக்கிற்கு மாற்றுவது)			
	28,000		28,000

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com

46. (அ)

திருத்திய பதிவுகள்

வ.எண்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
(அ)	சம்பளம் க/கு ப குமணன் க/கு (குமணன் க/கு தவறாக பற்று வைத்ததை திருத்தியது)		10,000	10,000
(ஆ)	வாடகை க/கு ப செங்குட்டுவன் க/கு (செங்குட்டுவன் கணக்கில் தவறுதலாக பற்று வைத்ததைத் திருத்தியது)		6,000	6,000
(இ)	விற்பனை க/கு ப அறைகலன் க/கு (விற்பனைக் கணக்கு தவறுதலாக வரவு வைத்ததைத் திருத்தியது)		2,000	2,000
(ஈ)	குமாரராசா க/கு ப விற்பனை க/கு (குமாரராசா கணக்கு தவறுதலாக வரவு வைத்ததைத் திருத்தியது)		10,000	10,000
(உ)	எடுப்புகள் க/கு ப மணிமாறன் க/கு (மணிமாறன் கணக்கு தவறுதலாக வரவு வைத்ததைத் திருத்தியது)		1,000	1,000

(அல்லது)

(ஆ) (i) **வணிகத் தனித்தன்மை கருத்து :**

அ) இந்தக் கருத்தின்படி, வணிகநிறுவனம், முதல் இடுகின்ற உரிமையாளர் அல்லது உரிமையாளர்களிடமிருந்து தனித்து மற்றும் வேறுபட்டுள்ளதாக கருதப்படுகிறது.

ஆ) இக்கருத்தின் அடிப்படையில் கணக்குகள், உரிமையாளரின் கண்ணோட்டத்தில் இல்லாமல் வணிக நிறுவனத்தின் கண்ணோட்டத்தில் தயாரிக்கப்படுகின்றன.

இ) ஆதலால், உரிமையாளரின் முதல், நிறுவனம் செலுத்த வேண்டிய ஒரு பொறுப்பாகும்.

(ii) **அடக்கவிலை கருத்து :**

அ) வணிகத்தில் ஒரு சொத்தானது புராதன அடக்கவிலையில் அதாவது வாங்கிய விலையில் பதிவு செய்யப்படுகிறது.

ஆ) அடக்கவிலையே அனைத்து தொடரும் கணக்கியலுக்கும் அடிப்படையாக அமையும்.

இ) இது, சொத்துகள் எப்போதுமே அடக்க விலையில் காண்பிக்கப்படும் என்று பொருளாகாது.

ஈ) சொத்து வாங்கும் பொழுது அடக்கவிலையில் பதிவு செய்யப்பட்டு முறையாகத் தேய்மானம் புத்தக மதிப்பிலிருந்து கழிக்கப்பட்டு காண்பிக்கப்படுகிறது.

(iii) **இரட்டைத் தன்மை கருத்து :**

அ) இக்கருத்தின்படி ஒவ்வொரு நடவடிக்கையும் அல்லது நிகழ்வும் இரண்டு தன்மைகளைக் கொண்டிருக்கும்.

ஆ) உதாரணமாக, அருண் ₹5,00,000 ரொக்கத்துடன் ஒரு தொழிலை தொடங்கும்போது, நிறுவனத்திற்கு ₹5,00,000 ரொக்கமாக கிடைக்கும் அதே நேரத்தில் வணிக நிறுவனம் அருணுக்கு ₹5,00,000 கொடுக்க வேண்டிய பொறுப்பு உருவாகிறது.

இ) இக்கருத்து, ஒவ்வொரு பற்றுத்தன்மைக்கும் தொடர்புடைய மற்றும் நிகரான வரவு இருப்பதை உணர்த்துகிறது. இதுவே, இரட்டைப்பதிவு முறையில் கணக்கேடுகள் பராமரிப்பு அனைத்திற்கும் அடிப்படையாக விளங்குகிறது.

ஈ) இக்கருத்திலிருந்தே அடிப்படை கணக்கியல் சமன்பாடு உருவாக்கப்பட்டுள்ளது. அதாவது,

முதல் + பொறுப்புகள் = சொத்துகள்

(iv) **பொருத்துகைக் கருத்து :**

அ) பொருத்துகைக் கருத்து ஒரு குறிப்பிட்ட கணக்காண்டில் ஈட்டிய வருவாய், அவ்வருவாயை ஈட்ட அவ்வாண்டில் செய்த செலவுகளோடு ஒப்பிடப்படுவதைக் குறிக்கும். இது நிகழ்வுத் தீர்வு கருத்து மற்றும் கணக்கியல் காலக் கருத்தினை அடிப்படையாகக் கொண்டதாகும். கணக்கியல் காலக்கருத்து, நிறுவனத்தின் திறனை அளவிடவும் மற்றும் நிதிநிலையை தீர்மானிப்பதற்குமான காலக்கெடுவை நிர்ணயிக்கிறது.

ஆ) குறிப்பிட்ட ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் அனைத்தும் கணக்கில் கொள்ளப்படாமல் அந்தக் கணக்காண்டிற்குரிய செலவுகள் மட்டுமே கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com

இ) இக்கருத்தின் அடிப்படையில், கொடுபட வேண்டிய மற்றும் முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் மற்றும் பெறவேண்டிய அல்லது முன்கூட்டிப் பெற்ற வருமானங்கள் போன்றவற்றிற்கு சரிக்கட்டுதல்கள் செய்யப்படுகின்றன.

ஈ) மேலும், ஒரு கணக்காண்டிற்குரிய நிலைச்சொத்தின் மீதான தேய்மானம், வாராக்கடன் போன்றவற்றிற்கான ஒதுக்கு, இக்கருத்தின்படியே உருவாக்கப்படுகிறது. இவ்வாறாக இலாபநட்டப்பகிர்வுக்கு முன் ஒரு கணக்காண்டில் ஈட்டிய வருவாய், அவ்வாண்டில் அவ்வருவாயை ஈட்ட செய்த செலவுகளோடு ஒப்பீடு செய்யப்படுகிறது.

(v) **நிறுவனத் தொடர்ச்சி கருத்து :**

அ) இது ஒரு அடிப்படை கருத்து. இதன்படி, ஒரு வணிக நிறுவனம் தொடரக்கூடியது மற்றும் நீண்ட காலத்திற்கு தொடர்ந்து செயலாற்றும் என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையிலேயே நடத்தப்பட்டு வருகிறது.

ஆ) இக்கருத்தின் அடிப்படையில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை மதிப்பீடு செய்தல், நிலைச்சொத்தின் மீதான தேய்மானம், கொடுபட வேண்டிய மற்றும் முன்கூட்டிச் செலுத்திய செலவுகள், பெற வேண்டிய மற்றும் கூடியுள்ள வருமானம் போன்றவைகளின் கணக்கியல் வழிமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

47. (ஆ) **சரி செய்யப்பட்ட இருப்பாய்வு மார்ச் 31, 2017**

கணக்கின் பெயர்	பற்று இருப்பு ₹	வரவு இருப்பு ₹
கட்டடம்	60,000	
இயந்திரம்	17,000	
கொள்முதல் திருப்பம்		2,600
வாராக்கடன்	2,000	
ரொக்கம்	400	
பெற்றத் தள்ளுபடி		3,000
வங்கி மேல்வரைப்பற்று		10,000
கடனீந்தோர்		50,000
கொள்முதல்	1,00,000	
முதல்		72,800
பொருத்துகைகள்	5,600	
விற்பனை		1,04,000
கடனாளிகள்	60,000	
வட்டிப் பெற்றது		2,600
மொத்தம்	2,45,000	2,45,000

(அல்லது)

(ஆ)) **டிசம்பர் 31, 2022-ம் நாளன்றைய வங்கிச் சரிக்கட்டும் பட்டியல்**

விவரம்	₹	₹
வங்கி அறிக்கையின் படி மேல்வரைப்பற்று		6,500
கூட்டுக : விடுத்த காசோலை இன்னும் செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படவில்லை	3,000	3,000
		9,500
கழிக்க : வங்கியில் செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படவில்லை	10,500	
வங்கியால் தவறுதலாக பற்று வைக்கப்பட்டது	500	
வங்கியால் பற்று வைக்கப்பட்ட வங்கிக் கட்டணம் மற்றும் வட்டி	180	
நிலை அறிவுறுத்தலின்படி வங்கி நேரடியாகச் செலுத்திய காப்பீட்டு முனைமம்	100	11,280
ரொக்க ஏட்டின் படி இருப்பு		–1,780

❆❆❆❆❆

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com